பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 24 சனிக்கிழமை (06 06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 191

# குண்டுவீச்சு அட்டூழியத்தை எதிர்த்து

# மக்கள் திரண்டு எழுச்சிப் பேரணி!

## அனைத்துத் தரப்பினரும் ஆர்வத்துடன் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

**ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், அகதி முகாம்கள், பாடசாலைகள் மீது கண்மூடித்தனமான முறையில் குண்டு வீச்சு நடத்துவதைக் கண்டித்தும்—**

**ஸ்ரீலங்காப் படையினரின் அட்டூழியத்தை நிறுத்துமாறு கோரியும் —**

**நேற்றுக் காலை நல்லூரிலிருந்து யாழ். கச்சேரி வரை மிகப் பிரமாண்டமான, மக்கள் எழுச்சியைப் பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்த மௌனப் பேரணி ஒன்று நடைபெற்றது.**

**சர்வ மதகுருமார், அறிஞர்கள், கல்விமான்கள், சமூகப் பெரியார்கள், கலைஞர்கள், அரச ஊழியர்கள், கூட்டுறவு மற்றும் வர்த்தக ஊழியர்கள், மாணவர்கள், உழைக்கும் மக்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் ஓரணி திரண்டு நேற்றைய பேரணியில் கலந்து கொண்டனர்.**

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கத்தோலிக்க திருச்சபை சார்பில் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ் ஏ. மைக்கல்சாமி அடிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த வண. பிதா பி. நேசக்குமார், இலங்கை தர்மசாசன குருதல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவா குருக்கள் ஆகியோர் பேரணியின் முன்னணியில் சென்றனர்.

மதகுருமார்கள், கன்னி

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மத வழிபாட்டு நிலையங்களை பாதுகாப்புப் பிரதேசங்களாக்குக!

## சர்வ சமய, சமூக நிறுவன ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

★ வடக்கு, கிழக்கில் உள்ள வழிபாட்டு இடங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

★ ஆலயத் தாக்குதல்களில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்களை அரசாங்க அதிபர் ஜனாதிபதியோடு தொடர்பு கொண்டு அவருக்குத் அறிவிக்க வேண்டும்.

சர்வ சமய சமூக நிறுவனங்களின் ஒன்றியம் நேற்று கையளித்த மகஜர்களில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. யாழ். அரச அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதி ஆகியோருக்கு இந்த மகஜர்கள் விலாசமிடப்பட்டிருந்தன.

வடக்கிலும், கிழக்கிலும் முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டிடங்களை அழித்துத் துடைத்து விடுவதற்கான ஓர் அடையாள நடவடிக்கையாகவே தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயம் மீதான வானத்தாக்குதலைக் கருத வேண்டியிருக்கிறது என மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாக்குதலில் இருந்து விலகிக் கொள்ள ஆலயங்களில் சென்று குழுமும்படி மக்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய அட்டூழியமானது மிகமோசமானதும் மனிதத் தன்மையற்றதுமாகும்.

ஆலயத்தின் சமூக நலப் பணிகளுக்கும், சேவைகளுக்கும் தடை ஏற்படும் விதத்தில் — சினமூட்டப்படாத நிலையில் — திட்டமிட்டு — இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தெற்கில் பேய் மழை! கொழும்பில் வெள்ளம்!!

கொழும்பு ஜூன் 6

கொழும்பிலும் மற்றும் தென் பகுதிகளிலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாகக் கொழும்பின் பல பகுதிகள் வெள்ளத்தில் ஆழ்ந்தன; நூற்றுக்கணக்கான வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கின! கொழும்புப் பகுதியில் சுமார் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், அரச கட்டடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பிரதான வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியதால் கொழும்பு நகரில் போக்குவரத்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொலீஸாரும் கடற்படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பெரிய மரங்கள் முறிந்து விழுந்ததால் பிரதான மின் இணைப்புக்கள் சேதமடைந்துள்ளன. இதனால் தலைநகரின் பெரும் பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

1876 ஆம் ஆண்டின் பின் இலங்கையின் வரலாற்றில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சியான 493.7 மி. மீ. மழை கொழும்பில் பெய்திருப்பதாகக் கணிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு உதவி செய்வதை தடுப்பதற்கு 'தண்டோரா'!

## தஞ்சை மாவட்டத்தில் ஏற்பாடாம்

சென்னை, ஜூன் 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பங்கு வகிப்பவர்களுக்கும், ஆதரவாக மற்றும் தூண்டுகோலாக செயற்படுபவர்களுக்கும் ஏழு வருடங்கள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

இத்தகைய அறிவிப்பை 'தண்டோரா' [முரசு அறைவது] போட்டு தஞ்சை மாவட்டக் கடலோரப் பகுதிகள் எங்கும் விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் —

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு எரிபொருள்கள் கடத்தப்படுவதை முழு அளவில் கட்டுப்படுத்துவதற்காக தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் — ஏழு இடங்களில் சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## புலிகளை ஆதரிப்பதற்காக

# பாட்டாளி கட்சி தலைவரின் கொடும்பாவி எரிப்பு!

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்துக் கூறிவந்ததற்காக திருச்சி மத்திய பஸ் நிலையப் பகுதியில் — பெரியார் சிலைக்கு அருகே — பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸின் தலைவர் இளங்கோ தலைமையில் காங்கிரஸ் தொண்டர்கள் இக்கொடும்பாவியை எரித்தனர்.

விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு தடை விதித்ததை ஆட்சேபித்து டாக்டர் ராமதாஸ் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்தே அவரது கொடும்பாவி எரிக்கப்பட்டதாக இளைஞர் காங்கிரஸார் தெரிவித்தனர் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [உ-எ]

# ராஜீவ் கொலையில் காங்கிரஸ் சம்பந்தம்!

## நீதிமன்றத்தில் ஆதிரை மனு

சென்னை, ஜூன் 6

''ராஜீவ் கொலையில் காங்கிரஸாருக்கும் தொடர்பு உண்டு.''

மேற்படி கொலைவழக்குச் சந்தேக நபர்களில் ஒருவரான ஆதிரை இவ்வாறு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு குற்றவியல் நீதிமன்றில் ஆதிரை மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த மனுவில் தாம் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப் போவதாகவும் அதற்கு அனுமதி வழங்கும்படியும் அவர் கோரியிருந்தார். மனுவில் அவர் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது:-

ராஜீவ் கொலையில் நடந்த உண்மை என்ன என்பது பற்றியும், அதில் காங்கிரஸ் சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும், அது பற்றிய உண்மைகளையும் சி. பி. ஐயிடம் [மத்திய புலனாய்வுத்துறையிடம்] சொன்னேன். அதை வெளியில் சொல்லக்கூடாது என்று கூறி அவர்கள் என்னை அப்போது அடித்தார்கள்.

நான் சொன்ன உண்மைகளை சி. பி. ஐ. பொலீஸார் பதிவு செய்யவில்லை. சிவராசனுடன் தொடர்பு வைத்திருந்த பெரிய மனிதர் யார். யார் என்ற உண்மைகளையும் கொலை சம்பந்தமான உண்மைகளையும் சொல்ல விரும்புகிறேன். அதை ஒப்புதல் வாக்குமூலமாகப் பதிவு செய்ய வேண்டுகிறேன். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# பேரணி படமானது!

யாழ்ப்பாணம், ஜூன் 6

சைப்பிரஸைத் தலைமையகமாகக் கொண்ட ஐ. ரி. எஸ். தொலைக்காட்சி நிறுவனத்தினர் நேற்று யாழ் நகரில் இடம் பெற்ற பேரணியைப் படமாக்கிக் கொண்டனர்.

பேரணி சென்றதை அவர்கள் வீடியோ மூலம் படம் எடுத்ததுடன், மத குருமார்களிடம் பேரணியின் நோக்கம் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

[உ-3-15-162]

## யாழ். ஆஸ்பத்திரியில்

# கண் சிகிச்சை வசதிகளை சீர்செய்ய நடவடிக்கை

யாழ். ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்காக — கண் கிளினிக்கிற்கு — வரும் நோயாளர்களின் அவல நிலையைப் போக்குவதற்கு புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

கண் நோயாளர்கள் முதல் நாள் இரவே ஆஸ்பத்திரிக்கு வந்து நித்திரை விழித்து, கியூவில் நின்று, சிகிச்சைக்கான துண்டு பெறும் முறை புதிய திட்டத்தினால் தவிர்க்கப்படும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9, 10 ஆம் திகதிகளில்

# யாழ். பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 6 யாழ். மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் நடைபெறும்.

9 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும்—

10 ஆம் திகதி பிற்பகல் 1-30 மணி முதல் மாலை வரையும் போட்டிகள் இடம் பெறும்.

கல்விக் கோட்ட மட்டங்களில் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் முதல் இரு இடங்களைப் பெற்ற மெய்வல்லுநர்கள் மாவட்ட மட்டத்தில் நடைபெறும் இப்போட்டியில் பங்குபற்றுவர்.

யாழ். மாவட்ட போட்டிகளுக்கு கல்விப் பணிப்பாளர் திரு. [illegible]. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் சான்றிதழ்களை வழங்குவார்.

இப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா செய்து வருகிறார். [உ]

---


கொக்குவில்

இந்து மயான அபிவிருத்திச் சபை

## அறிவித்தல்

மேற்படி மயானத்தையோ, சேவையில் உள்ள பிரேத வண்டியையோ உபயோகிக்க விரும்புபவர்கள் 01-06-1992 முதல் தனாதிகாரியிடம் உரிய கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்று, தற்போதைய காவலாளியான திரு. கி. மகேந்திரன் (கொக்குவில் மயானத்திற்கு அருகாமையில் வசிப்பவர்) என்பவரிடம் கையளித்து, கிரியைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

திரு. கா. கந்தசாமி (கிளி) என்பவர் தற்போது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவருடன் மயானம் சம்பந்தமான எந்தவித தொடர்புகளையும் வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சி. மாதவகுமாரன்,
செயலாளர்.

[21272]


---


# I. A. B. (LONDON)
## Dec. - 1992

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 10 — 06 — 1992

FOUNDATION
INTER
AND
FINALS

★ புதிய பாடத்திட்டத்திற்கமைந்தது
★ London கணக்கியல் பரீட்சைகளில் தேற இலகு பயிற்சி நெறி
★ கணக்கியல் அனுபவத்திற்கு இலகுவானது.
★ யாழ். நகரிலேயே பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னணியில் உள்ளவர்கள்.

விவரங்களுக்கு:

## North Ceylon Technical Institute

14, St. Peter's Lane,
JAFFNA.

Sirrupiddy North,
NEERVELLY.

[சி-2663]


---


# ஆங்கிலம் - ENGLISH

ENGLISH GRAMMAR
By
KANDASAMY
For
G. A. Q., E. S. O. L., G. E. L. T.
N. C. E, A/L, O/L
With
SPOKEN ENGLISH
and
ENGLISH LITERATURE
Beside
Special Coaching in Elocution and Oratory
[ஆங்கிலப் பேச்சுத்திறன்].

3 மாதப் பயிற்சி கிழமையில் 2 நாட்கள்
ஆரம்பம்: 07 — 06 — 1992 ஞாயிறு
பிற்பகல் 3-30 மணிக்கு

87, திருநெல்வேலி றோட்,
(பாலத்திற்கு அண்மையில்)
கொக்குவில்.

[21269]


---

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6 டொனால்ட் கணேஷ் குமார் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதும்.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17, 15 வயதுக்குட்பட்டோர் பாடசாலைகள் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகிறது.

15 வயதுப் பிரிவில் சென். ஜோன்ஸ் அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் அணி மோதும். இந்த ஆட்டம் கனகரத்தினம் ம. ம. வி மைதானத்தில் நடைபெறும்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதும்.

இரு ஆட்டங்களும் இன்று காலை 9 மணிக்கு ஏககாலத்தில் ஆரம்பமாகும். [உ]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 6 மகளிர் அபிவிருத்தி நிலையம், சூழல் அபிவிருத்தி தொடர்பாக ஏற்பாடு செய்துள்ள இரண்டாவது கருத்தரங்கு கட்டைப்பராயிலுள்ள சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். முதலாவது கருத்தரங்கு நாவாந்துறையில் ஏற்கனவே நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை ஒட்டி, யாழ். கோயில் வீதியில் உள்ள பிரிவு அலுவலகத்தில் நாளை காலை 9 மணிமுதல் மர நடுகை உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. [உ]

---


# நொதேண் கல்வி நிலையம்

O/L Day Class
O/L Evening Class
5ஆம், 6ஆம், 7ஆம்,
8ஆம், 9ஆம், 10ஆம்
ஆண்டுகளுக்கான
பிரிவு !!
ஆரம்பமாகிவிட்டன.
★ கணிதம் கிழமையில் 6 வகுப்புகள் நடைபெறுகின்றன.

[21277]


---


★ சுபேன் ★
இன்ஸ்ரிரியூட்
[ஞானம்ஸ் ஸ்ருடியோ அருகாமையில்]

A/L 92 வினா - விடை
கணக்கியல்
Mr. D. SAM
ஆரம்பம்: 07-06-1992
காலை 7 மணி [ஞாயிறு]
[21286]


---

# மரண அறிவித்தல்கள்

## திரு. மனுவேற்பிள்ளை இராசதுரை (தம்பி)

இளவாலையைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை இராசதுரை 3-6-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை, லூட்ஸ்மேரி ஆகியோரின் புதல்வனும், பற்றிமாவின் அன்புக் கணவரும், தனுஜாவின் [மாணவி குட்செப்பேர்ட் கொன்வன்ட் கொட்டாஞ்சேனை] தந்தையும், ஆன்பிலோமினா, மரிஸ்ரெலா, மாசில்லா, மனுவெலா ஆகியோரின் சகோதரரும், ஞானப்பிரகாசம் [இளைப்பாறிய ஆசிரியர் St Patricks], போல் ஜோசவ் [கணக்காளர் - லண்டன்], Dr லோறன்ஸ் Hongkong], சிறில் [உதவி முகாமையாளர் ஹட்டன் நாஷனல் வங்கி - கொழும்பு] ஆகியோரின் மைத்துனரும், பண்டிதர் சந்தியாப்பிள்ளை தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இளவாலை புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி

''ஆன் இல்லம்''
பிரதான வீதி,
இளவாலை.

[21290]

## திருமதி ஆரோக்கியநாதர் செல்லம்மா

சங்கரத்தை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆரோக்கியநாதர் செல்லம்மா 5-6-92 இல் காலமானார். இவர் யேசுதாசன், அன்ரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகமலர், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி, பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 6-6-92 சனிக்கிழமை சங்கரத்தை இல்லத்தில் நடைபெற்று மாலை 2 மணிக்கு பூதவுடல் தகனத்திற்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ஆ. யேசுதாசன்
[மகன்]

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

[21296]

## ஆறுமுகம் கைலாயபிள்ளை

சிறுப்பிட்டி தெற்கு ஆறுமுகம் கைலாயபிள்ளை 05-06-1992 இல் காலமானார். அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், திரு. கை. மகேசலிங்கம் [ஆசிரியர் — அதிபர் இந்துக் கல்லூரி, நீர்வேலி], திருமதி நடேஸ்வரி முத்துக்குமாரசாமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திரு. ந. முத்துக்குமாரசாமி, திருமதி ஜெகதேவி மகேசலிங்கம் ஆகியோரின் மாமனாரும், விக்னேஸ், முருகதாஸ், ரகுவரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 06-06-1992 காலை 10 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கை. மகேசலிங்கம்.
[மகன்]

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

[21287]

## கனகசபை கந்தையா
### (சரவணை கிழக்கு)

சரவணை கிழக்கைச் சேர்ந்தவரும் தற்போது 40/2, நாவலர் வீதியில் வசித்தவருமாகிய கனகசபை கந்தையா 05 - 06 - 1992 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை, மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், இளையபிள்ளை ஆகியோரின் மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், சறோஜினிதேவி [ஆசிரியை, சரவணை நாகேஸ்வரி ம. வி], நமசிவாயம் [கனடா], யோகமங்களம், பாக்கியலட்சுமி [ஆசிரியை யாழ்/ பெரிய புலம் ம. வி.], ராதாமணி [ஆசிரியை, பனை றோ.க.த.க.பா], ரவீந்திரன் [ஸ்ரீ விஸ்ணு அசோசியேட்ஸ், கொழும்பு], ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அருணகிரிநாதன் [ஆசிரியர், வேலணை கிழக்கு ம.வி.] வடிவாம்பிகை [கனடா], தியாகராசா [கனடா], கணேகபிள்ளை [யாழ்/ கல்வித் திணைக்களம்], ஆகியோரின் அன்பு மாமனாரும், அமுதினி, சிவரூபன், அனுஷன், ஹரிகரன், நிரந்தரி, வர்சினி ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் [முன்னாள் அதிபர்], திருமதி சிவக்கொழுந்து மார்க்கண்டு, செல்லையா, மற்றும் திருமதி அன்னலெட்சுமி இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, குமரையா, மற்றும் படிகலிங்கம் [கொழும்பு], திருமதிகள் தவநிதிப்பிள்ளை, சின்னத்துரை, பராசக்தி திருநீலகண்டம், சௌந்தரம், விநாயகமூர்த்தி [ஆசிரியை, சரவணை நாகேஸ்வரி, ம. வி.] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. கணேசபிள்ளை

40/2, நாவலர், வீதி,
[மனோகரா தியேட்டர் அருகாமை]
யாழ்ப்பாணம்.

[21289]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



# யாழ்ப்பாணத்தைப் பிடித்தாலும் கூட பிரச்சினைதீராது; சண்டை தொடரும்!

## இராணுவ உயர் அதிகாரி கருத்து

கொழும்பு, ஜூன் 6

யாழ்ப்பாணத்தைப் படையினர் பிடித்து விட்டால், பிரச்சினை முடிந்து விடும் என்று சிலர் நினைக்கின்றனர். நிலைமை அது அல்ல சண்டை தொடரவே செய்யும்.

கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இதேசமயம் ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றை நாடக்கூடிய சாத்தியம் இல்லை என அதிகாரிகளும், ராஜதந்திரிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர் என்றும் ரொய்ட்டர் வெளியிட்ட விமர்சனக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மீது தாக்குதல் நடத்தினால் பொது மக்களின் இழப்புக்கள் மிகவும் அதிகமாக இருக்கும்—

அதேசமயம் இராணுவத்தின் சில பிரிவுகள் யாழ்ப்பாணத்துக்குள் சென்று புலிகளின் தலைமையகத்தைத் தாக்க வேண்டும் என விரும்புகின்றன—

எனினும் முழு அளவிலான தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு எமக்கு தந்திரோபாய ரீதியாக நகர்வதற்கான வசதிகள் குறைவாகவே உள்ளன—என்று ஓர் இராணுவ அதிகாரி சுட்டிக் காட்டினார்.

இதே வேளை—

ஒரு கட்டுப்பாட்டுக்குள் நின்று சண்டையிடக் கூடிய திறமையைப் பெற்றவர்கள் விடுதலைப் புலிகள் என்று யாழ்ப்பாணத்தில் வசித்த ஒரு தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர்கள் தாக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் நிலை ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் அவர்களுடைய அதிகாரம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. அவர்கள் அங்கு இறைமையைக் கொண்டுள்ளனர். அதை நிலை நிறுத்துவதற்காக அவர்கள் நிச்சயமாகப் போராடுவார்கள்—எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடைசியாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் இராணுவத்தினர் இடையே காணப்படும் முரண்பாடான, கருத்துக்கிடையேயான ஒரு சமாதானமே என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அந்த விமர்சனக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-3]

## அண்ணமார் ஆலயத்திற்கும் பெரும் சேதம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை குண்டு வீச்சுக்கு இலக்கான தெல்லிப்பழை கோவிற் புலம் அண்ணமார் ஆலயத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துர்க்கை அம்மன் கோயிலுக்கு சமீபமாக உள்ள இக்கோயிலின் இரண்டாவது மண்டபம் குண்டு வீச்சினால் சேதம் அடைந்துள்ளது. நாகதம்பிரான கோயில் முற்றாகச் சேதமடைந்துள்ளது. விக்கிரகம் உடைந்து சரிந்து காணப்படுகிறது. அத்துடன் வைரவர், காளி கோயிலும் சிறிது சேதமுற்றது

அண்ணமார் ஆலய பூசகரின் வீடும் சேதமடைந்துள்ளது வீட்டுக்குள் இருந்த பூசகரின் குடும்பம் மயிரிழையில் உயிர் தப்பியது [இ]


சகல பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும்,

**விசேட பொதுக் கூட்டம்**

**28-06 1992**

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தை எதிர்வரும் 28-06-1992 ஆம் திகதி நடத்த இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது. எனவே பொதுச்சபை பிரதிநிதிகள் தங்களுடைய தற்போதைய விலாசத்தை செயலாளர், புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், இல. 201/1. 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் காலக்கிரமத்தில் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

செயலாளர்,
புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.

[சி-2655]



**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

4 MONTHS

புதன், வெள்ளி வகுப்புகள்

ஆரம்பம்: 10 - 06 - 1992
9 - 00 மணி

Lectures by - S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

I. A. B. - Foundation, Inter, Final, Short-Hand & Typing

புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET,
JAFFNA.

[சி/2650]



வண்ணை சிவன் தேவஸ்தானம்

★ **சேக்கிழார் பெருவிழா** ★

3 ஆம் நாள் நிகழ்ச்சி
07-06-1992 ஞாயிறு மாலை 6-00 மணி.

★ **பட்டி மண்டபம்** ★

நடுவர்:
**திரு. இ. ஜெயராஜ் அவர்கள்**
[அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்]

பொருள்
மானுடம் நினைக்க அஞ்சும் மாண்பினைப் பெரிதும் செய்தார்

| கண்ணப்பரே | நீலகண்டரே | சிறுத்தொண்டரே |
|---|---|---|
| | | கலைப்பேரரசு |
| திரு. க. சிவராமலிங்கம் | திரு. எஸ். வேலாயுதபிள்ளை | ஏ. ரி. பொன்னுத்துரை |
| திரு. ஆறு. திருமுருகன் | திரு. ஸ்ரீ பிரசாந்தன் | திரு. க. குமாரதாசன் |
| திரு. இரா செல்வவடிவேல் | திரு. தி. திருநந்தகுமார் | திரு. த. சிவகுமாரன் |

[சி-2394]



உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் [06-06-1992] சனிக்கிழமை பகல் 10-29 மணிமுதல் 12-35 மணிவரையுள்ள சித்தயோகம் கூடிய ★ சுபமுகூர்த்த வேளையில் ★

| திரு. திருமதி தில்லையம்பலம் அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் **சற்குணராஜா** அவர்களுக்கும் | திரு. திருமதி நாகராசா அவர்களின் புத்திரி திருநிறை செல்வி **உருத்திரகுமாரி** அவர்களுக்கும் |
|---|---|

திருவருள் துணை கொண்டு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சுற்றஞ்சூழ வருகைதந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறுமிடம்: Gasthof, Emmennmatt, 3543 Emmennmatt - Switzerland.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

| திருமதி தில்லையம்பலமும் குடும்பத்தினரும், 5ஆம் வட்டாரம், நயினாதீவு. | திரு. திருமதி நாகராசாவும் குடும்பத்தினரும், 30/4, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். |
|---|---|

[illegible]



மூன்றாவது

**பிறந்த தின வாழ்த்து**



★ **சகிஸ்னா விஸ்வலிங்கம்** ★

பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த விஸ்வலிங்கம் - இந்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சகிஸ்னா தனது மூன்றாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமர்சையாக இன்று (06-06-1992) கொண்டாடுகிறார்.

சகிஸ்னாவை அன்பு அப்பா, ஆசை மம்மி, தாரி அக்கா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார், அன்ரிமார், மாமாமார், மாமிமார், அங்கிள்மார், உமா குடும்பத்தினர், மணி குடும்பத்தினர் சந்தனமாதா அருள் பெற்று, நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இல. 54/4, சந்தனமாதாகோவில் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு,
சுண்டிக்குளி.

(21252)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் செபமாலைகள், செபப் புத்தகங்கள், தோல கட்டி நெல்லிரசம் முதலியன விற்பனைக்கு உண்டு. புனித சித்தாத்திரை மாதா கைத் தொழில் நிலையம், இல. 13, மவுண்காமல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (21275)

### விற்பனையாகிறது

A/L கடந்த கால வினா - விடை, உயர்கல்வி வெளியீடு, O/L கடந்த கால வினா - விடை மலிவு விலையில் ஒப் சேவர் டயறி, பிரபல எழுத் தாளர்களின் இந்தியா நாவல் கள், திருமண அச்சடிக்கும் கார்ட்டுகள். மச்மிலன் புத் தகசாலை, யாழ்ப்பாணம். ஶ்ரீகாந் புத்தகசாலை. நல் லூர். [சி-2638]

### மணமகன் தேவை

35 வயது ஆசிரியை, நட் சத்திரம்: கேட்டை மணமக ளுக்கு, அரசாங்க உத்தி யோகத்தில் உள்ள மணமகன் தேவை. செ. விஜயரத்தினம், லெட்சுமி திருமணசேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [21273]

### அம்பாள் திருமண சேவை

பட்டதாரி, டாக்டர், என் ஜினியர், கணக்காளர், ஆசிரி யர் ஆகிய மணப்பெண்களுக்கு தகுந்த மணமக்கள் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள் ளவும். சின்னச்சாமிக் குருக் கள் சண்முகஐயர், வீரமா காளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். [21276]

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை, 07 - 06 - 1992, ஞாயிறு மு.ப. 8-00, மு.ப. 11-00 க்கும் நடைபெறும் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21245]

### செவ்வாய் மாற்றம்

இன்று செவ்வாய் ஜூன் ஜூலையில் பலமடைவதா லும், சனிக்கு அஷ்டமத்து வியாழன் [20-09-1992] முடி யும் வரை சண்டை தொட ரும். இராணுவ இழப்புக் களும் அதிகரிக்கும். [செவ் வாய் மாற்றம் வெளிவர மாட்டாது] Prof. சத்திய தாஸன், சித்தன்கேணிச் சந்தி. [20585]

### யாருடையது?

கொம்படிப் பாதையில் 1-6-92 இரவு சிறுதொகைப் பணத்துடனும், சில ஆவணங் களுடனும் ஒரு பணப்பை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங் களைக் காட்டி இல 51, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முக வரியில் பெற்றுக் கொள்ள வும். [21278]

### மணமகள் தேவை

யாழ். இந்து, 40 வயது நிரம்பிய, செவ்வாய்க் குற்ற மற்ற, AC ரெக்னீஷியன் மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம்: அத்தம், கிரக பாவம் 5/16, டாக்டர் கள், பொறியியலாளர்கள், செவ்வாய்க் குற்றம் உள்ளவர் களும் உண்டு. ABCDE இல. 20, கண்டி வீதி சுண் டிக்குளி. [21271]

### நீமியா உரம்

நீமியா உரம் பயிர் பாது காப்புக்கும், அதிக விளைச்ச லுக்கும் உதவுகிறது. கிலோ ரூபா 15/-. 20 கிலோ ரூபா 260/-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது மில்க்வைற். [சி-2385]

### மலைவேம்பு விதை

மலைவேம்பு விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-2386]

### திருமண சேவை

ஆண் பெண் டாக்டர்கள், விரிவுரையாளர்கள், வங்கி அதிகாரிகள், இன்னும் பலவித தொழில்களில் எம்மிடம் குறிப் புக்கள் உண்டு. நேரிலோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். விநாயக திரு மண சேவை, 53/5, அன்ன சத்திர ஒழுங்கை, கந்தர் மடம். [21261]

## கணக்கியல் A/L 92

முன்னணி நிறுவனங்கள் அனைத்திலும் அலகு ரீதியான மீட்டல் வினா-விடை வகுப்புகள்

ஆசிரியர்:

**S.K. பிரபாகரன்**
B. B. A.

★ உள்ளக மாண வருக்கு இலவசம்

[சி-2654]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L - 92 புவியியல்**

வினா-விடைவகுப்பு

ஆரம்பம்: 09—06—1992 [4-15 மணி]

ஆசிரியர்:

**திரு. குணராசா**

அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

[சி-2656]

## நாவலர் கல்வி கழகம்

**Naavalar**
Kalvi Kalaham
Navalar Lane,
Anaipantby.

ஆண்டு 9, 10 **O/L** வகுப்புகளுக்கான

விஞ்ஞானம் — T.S.S. மோகன், குணா
கணிதம் — பேரின்பநாதன், குணா
தமிழ் — ஆனந்தன், பைரவி
ஆங்கிலம் — இராஜநாதன்நைல்ஸ், ரமேஷ்
சமூகக்கல்வி — K.S. முத்துலிங்கம், ரூபி
சமயம் — ரூபி
வர்த்தகம் — K. சத்தி, வரன்

★ வரையறுக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி உண்டு.
★ இவ்வாண்டு இறுதிக்குள் சகல பாடத்திட்டங்களும் முடித்துக் கொடுக்கப்படும்.

[21262]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 04 — 1955



மறைவு: 17 — 06 — 1991

வேலணை மேற்கைச் சேர்ந்த - கரம்பன் கிழக்கில் வாழ்வு கொண்ட

**அமரர் கணபதிப்பிள்ளை மகாலிங்கம்**

[பிரபல வர்த்தகர் - உரிமையாளர், லிங்கம் ஸ்ரோர்ஸ், அரடிப்போக்கு - கிளிநொச்சி]

திதி: 06 — 06 — 1992

தேன்கூடு உடைந்ததையா
தென்றல் புயல் ஆனதையா!
நான்கொண்ட மாளிகையில்
நரிகள் குடி கொண்டதையா!
வான் பார்த்த பயிர்போல
வாட்ட முற்று நிற்கின்றோம்!
ஏன் என்று கேட்பதற்கு
என் தலைவா வருவாயா!

தங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்.

33, கொழும்புத்துறை றோட்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [illegible]

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

அளவெட்டி தெற்கு பத்துப் பனைபடி அருள்மிகு தான்தோன்றி ஈஸ்வரி ஆலய அதிர்ஷ்ட லாபச் சீட்டி ழுப்பின் முடிவுகள்.

அதிர்ஷ்ட இலக்கங்கள்

| | |
|---|---|
| 459 | 1475 |
| 1164 | 1466 |
| 693 | 324 |
| 1331 | 801 |
| 192 | 942 |

அதிர்ஷ்டசாலிகள் பற்றுச்சீட்டுடன் வந்து ஆலயத் தில் பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்:
ஆலயத் தொண்டர்கள்.

★ 15 ஆம் திகதிக்கு முன்பு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

[20585]

## எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்: 10 - 11 - 1929

விண்ணேகியது: 06 - 06 - 1984

டாக்டர்

**குகராஜா கணபதிப்பிள்ளை**

திதி: 06 06 1992

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை என்பதையறிவோம்!
உலகுக்கும் போலியுறவுக்கும் முன் தானே
உங்களை இழந்துள்ளோமேயன்றி
நாலிரண்டு ஆண்டாக நினைவுகளில் சுமந்து
சோக நெருப்பில் பொசுங்குகின்றோமே!

உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
மகள்மார், தாய்.

பொலீஸ் நிலையத்தடி,
சுன்னாகம்.

[20577]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 25 — 10 — 1971



வீர மரணம்: 06 — 06 — 1989

**ஏரம்பமூர்த்தி விஜயமூர்த்தி (ராஜன் - வீசு)**

நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவிருக்கும்;

நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே!
நீ இங்கில்லாத துன்பம் பெருகுதே!!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்காமார் மற்றும் உறவினர்கள்.

வி. எம். வீதி,
பருத்தித்துறை.

[21217]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை, தெங்கு — பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

### அறிவித்தல்

மேற்படி எமது சங்கம் 1-06-92 தொடக்கம் ''மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்'' (மாகியப்பிட்டிச் சந்தியில் இருந்து வடக்கே வரும் மல்லாகம் வீதியில் 1வது ஒழுங்கை மேற்குப் பக்கம்) என்னும் விலாசத்தில் தற்போது நடைபெறுகின்றது என்பதை எம்மோடு தொடர்புடைய சகல திணைக்களங்கள், நிறுவனங்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் யாவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-
பொதுமுகாமையாளர்,
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம் (தெல்லிப்பழை),
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (20587)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**O/L** 92 ஆம் ஆண்டுக்கான
இறுதிப் பிரிவு
Day Classes
[காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை]

ஆரம்பம்: **11 - 06 - 1992**

★ பிரபல்யமான, திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழுவின் ஒன்றிணைந்த சேவை.
★ விஞ்ஞான, கணித பாடங்கள் நாள் ஒன்றிற்கு இரு மணி நேரம் நடைபெறும்.
★ அலகு ரீதியான மீட்டல் வினா – விடை வகுப்புக்கள் இலவசம்.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-2661]



## Tender For The Supply of Furniture

Sealed tenders are invited for the Following

| | | | |
|---|---|---|---|
| 1. | Arm Chairs | — | 166 nos |
| 2. | Office Table | — | 11 nos |
| 3. | Glass Fronted Almirah | — | 11 nos |
| 4. | Executive Table Type I | — | 26 nos |
| 5. | Executive Table Type II | — | 02 nos |
| 6. | Executive Cushioned Chairs | — | 54 nos |
| 7. | Reading Table Type I | — | 05 nos |
| 8. | Reading Table Type II | — | 11 nos |
| 9. | Executive Steel Framed Chairs | — | 10 nos |
| 10. | Slotted Iron Shelves 6½' X 4½' X 2' Rack with Wheel | — | 03 nos |
| 11. | Straight Back Chairs | — | 100 nos |
| 12. | Book Rack | — | 05 nos |
| 13. | Wooden Cupboard 3' 6'' X 5' 3'' | — | 25 nos |
| 14. | Steel Cupboard (S T D) | — | 15 nos |
| 15. | Filing Cabinet (S T D) | — | 15 nos |
| 16. | Towel Rack | — | 04 nos |
| 17. | Canteen Sq. Steel Formica Top Table | — | 05 nos |
| 18. | Canteen Steel Chairs | — | 26 nos |
| 19. | Wooden Locker (12 Compartments) | — | 01 nos |
| 20. | Side Rack | — | 08 nos |
| 21. | Exam Folding Table | — | 100 nos |
| 22. | Notice Board 5' X 3' | — | 01 nos |

Drawings and relevant details could be obtained from the Bursar, University of Jaffna, between 08 - 06 - 1992 to 11 - 06 - 1992 during office hours on payment of Rs. 200/- as non-refundable deposit and Rs. 5,000 as refundable deposit.

Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before 10 a. m. on 23 - 06 - 1992 indicating 'Tenders for Furniture' on the left hand corner of the envelope. The tender will be opened on the same day at 10-30 a. m.

—Registrar.

[C-2392]


# இளைஞர் சமுதாயத்தை உரிய பாதையில் வழி நடத்தியவர்

## சேவை நலன் பாராட்டில் உரை

இளைஞர்கள்தான் எமது எதிர்காலச் சந்ததியினர். இவர்களை சரியான பாதையில் வழி நடத்துவதில் அதிபர் சிவவாகீசருக்கும் பெரும் பங்குண்டு.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் 12 ஆண்டு காலம் அதிபராகப் பணியாற்றி, ஓய்வுபெற்ற திரு சிவவாகீசருக்கு அண்மையில் வட்டுக்கோட்டை மக்கள் அளித்த சேவைநலன் பாராட்டு விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவர் திரு. தா. தங்கராசா விழாவுக்குத் தலைமை வகித்தார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் திரு. க. சிற்றம்பலம் உரை நிகழ்த்துகையில், இந்த விழா அதிபர் சிவவாகீசரின் பெருமையை ஆசிரிய சமூகம் அறிய உதவியாக இருக்கிறது என்றார்.

வித்துவான் இ பாலசுப்பிரமணிய ஐயர் ஆசியுரை வழங்கினார்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா, உதவி கல்விப் பணிப்பாளர் திரு. மு. சிவராஜரத்தினம், வட்டு கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ், காரை நகர் கொத்தணி அதிபர் திரு. செ. தேவதாசன், திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திரு. வி. சிவஞானபோதன், அதிபர் திரு ந பரமசிவம், வட்டு. இந்து வாலிபர் சங்கத் தலைவர் திரு. ந. சபாரத்தினசிங்கி ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

பாராட்டு வைபவத்தைத் தொடர்ந்து கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் நெறியாள்கையில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அளித்த மயில் நாடகமும் மற்றும் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் கவியரங்கமும் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டி மண்டபமும் நடைபெற்றன.

[இ-160]

# ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை

வவுனியா, ஜூன் 6

கடந்த 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆசிரியர்களாக நியமனம் பெற்று, பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து, மீண்டும் வேலை வழங்கப்படாதிருந்த நூற்றுக்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மீண்டும் உடனடியாக வேலை வழங்குவதற்கு கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய இடமாற்றத்துடன் வேலை வழங்குமாறு கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

வவுனியாவில் நடந்த இடம் பெயர் சேவையின் போது இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

[ஒ-3]


## காணவில்லை

எமது வீட்டில் சோடியாக வளர்க்கப்பட்ட பொமேரியன் வெள்ளை நாய்களில், ஆண் நாயை 4-6-92 வியாழன் இரவு 7:30 மணி தொடக்கம் காணவில்லை. தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சு. இரவீந்திரன்.
மேகாஸ் வீடியோ
[illegible] றோட், [illegible]
யாழ்ப்பாணம்.
[[illegible]]


# இடை நிறுத்தம் ரத்து

20 பட்டதாரி மாணவர்களை இடைநிறுத்தம் செய்து விடுவிக்கப்பட்ட உத்தரவை பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் ரத்துச் செய்து விட்டது.

புதிய மாணவர்களை ராக்கிங் செய்வதற்காக அவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

[த-எ]

# இரத்தினபுரிப் பகுதியிலும் புலிகள் ஊடுருவலாம்

கொழும்பு, ஜூன் 6

சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள தோட்டப்புறங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இடம்பெற்று வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் அபேரத்ன பிலப்பிட்டிய கேகாலை கச்சேரியில் நடைபெற்ற மாநாடொன்றில் பேசும்போது இக் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

இப்பகுதியில் இடம்பெற்று வரும் புலிகளின் ஊடுருவலை உடனடியாகத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் சப்பிரகமுவ மாகாண பொலீஸ் அதிபரைக் கேட்டுக்கொண்டார்.

இதேசமயம் —

அண்மையில் கேகாலை வெலிக்கந்த தோட்டத்தில் மாவனல்ல பொலீஸாரினால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சின்னையா தர்மலிங்கம் என்பவர் அளித்துள்ள வாக்கு மூலம் தொடர்பாக ஆராய்வதற்கு கேகாலை கச்சேரியில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

(ஒ-த-3)

# சந்திரசேகரனை உறவினர் சந்திக்க நீதிபதி அனுமதி

கொழும்பு, ஜூன் 6

மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ. சந்திரசேகரன், உபதலைவர் வ. தர்மலிங்கம், செயலாளர் பாவா அப்துல் காதர் ஆகியோரை அவரது உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகளும் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் கோட்டை பொலீஸ் நிலையத்தில் பார்வையிடலாம் என்று கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி இஸட் குணவர்த்தனா உத்தரவிட்டுள்ளார்.

கண்டி நீதிபதி முன் கடந்த வியாழக்கிழமை மூவரும் ஆஜர் செய்யப்பட்டனர். அப்போது அவர்களின் பாதுகாப்புக் குறித்து கைதானவர்களின் சட்டத்தரணி வாதாடினார்.

அதனையடுத்தே நீதிபதி மேற்கண்ட உத்தரவை வழங்கி வழக்கை ஒத்திவைத்தார்.

(த-3)

# வலி. வடக்கு பணிமனைகள் வேறு இடங்களுக்கு மாற்றம்

வலி - வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை அடுத்து, அப்பகுதியில் இயங்கிய அரச மற்றும் கூட்டுறவு அலுவலகங்கள் பலவும் தற்போது வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

மல்லாகத்தில் இயங்கி வந்த வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் சுன்னாகம் உதவி அரச அதிபர் பணிமனையிலும்—

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் முன்பாக இயங்கிய தெல்லிப்பழை தபாலகம் மற்றும் மல்லாகத்தில்

[6ஆம் பக்கம் பார்க்க]


## 26 நாட்கள் இறைகான இசைநிகழ்ச்சி

6 - 6 92 தொடக்கம் 1 - 7 - 92 வரை

இணுவில் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு பிற்பகல் 7.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை பிரபல இசை வித்துவான்கள் பங்குகொள்ளும் இசைநிகழ்ச்சி இடம்பெறும்.

முதல் நாள் நிகழ்ச்சி:
பாட்டு: திரு. பொன். சுந்தரலிங்கம்
வயலின்; R. ராதாகிருஷ்ணன் மிருதங்கம்: S. மகேந்திரன்
கெஞ்சிரா: K. துரைராஜா

(21288)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### வெளிவாரிக் கற்கைநெறிப் பதிவுகள் 1991/92 கல்வியாண்டு

கலை முதற் கற்கைநெறி [First in Arts]
வர்த்தக முதற் கற்கைநெறி [First in Commerce]
வணிகமாணி பகுதி I [Bachelor of Commerce Part I]
பொதுக் கலைமாணி பகுதி I [Bachelor of Arts General Part I]
சிறப்புக் கலைமாணி பகுதி I [Bachelor of Arts Special Part I]

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்ய கொடுக்கப்பட்ட காலம் 6 6-92இல் இருந்து 4-7-92 வரை நீடிக்கப்பட்டு உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
—பதிவாளர்
[சி/2390]


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி ஜயகுமார்

(ந. ப. கூ. ச. பிரதம கணக்காளர்)

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பிரதம கணக்காளர் குமாரசாமி ஜயகுமார் 5-6-92 நேற்று காலமானார். அன்னார் திருநெல்வேலி காலம்சென்ற குமாரசாமி தம்பதிகளின் மகனும், பவளமணி அவர்களின் அன்புக் கணவரும், பாலகுமாரின் சகோதரரும், J N. பொன்னையா தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 5-6-92 நேற்று பிற்பகல் 4 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். பங்குபற்றிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல்;
திருமதி பவளமணி ஜயகுமார்
இல. 7, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
[21294]

## திருமதி செல்லப்பா முத்துப்பிள்ளை

கொல்லங்கலட்டி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி செல்லப்பா முத்துப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், நாகராஜேஸ்வரி [பொறுப்பதிகாரி, புடவைக் கைத்தொழில்], இரத்தினேஸ்வரி, நாகராஜா [பெற்றோல் பாங், இந்தியா] ஆகியோரின் தாயாரும், நடராசா [V D கிளினிக் யாழ்ப்பாணம்], இரவீந்திரகுமாரன் [சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை], சுகந்தி ஆகியோரின் மாமியாரும், சங்கீதா [மகாஜனாக் கல்லூரி மாணவி], சஞ்சுதா, சமிதா, சந்துரு, சுபத்திரா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-6-92 வெள்ளிக்கிழமை அளவெட்டி பெருமாக்கடவையில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
பெருமாக்கடவை
அளவெட்டி.
மருமகன், மக்கள்.
[21292]

## இராமலிங்கம் கிருஷ்ணபிள்ளை

[ஒய்வுபெற்ற சிறாப்பர் - முன்னாள் மேர்கன்ரைல் வங்கி, கொழும்பு]

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓட்டுமடம் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராமலிங்கம் கிருஷ்ணபிள்ளை நேற்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், முத்தம்மா, நடுவில் ஆகியோரது சகோதரரும் திருமதி இராசரத்தினத்தின் சகோதரரும், திருமதி கனகரத்தினத்தின் [கனடா] மைத்துனரும் காலஞ்சென்ற டாக்டர் யோகநாதன், ஜெயநாதன், [கனடா], சரோஜா [கனடா], சிவகாமசுந்தரி, சிவகுமார் [கனடா] காலஞ்சென்ற சிவாஜினி [கனடா] ஆகியோரது அன்புத் தந்தையும் சகானந்தன் [கனடா], பத்மினி [கனடா], தவரத்தினம் [உள்ளூராட்சித் திணைக்களம் - யாழ்ப்பாணம்], உதயகுமார [கனடா], ஒஸ்ரீன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜனி, ரோஜினி, ராணியா, ராஷா, வாசுகி, முகுந்தன், ஜெரமி, சுரேஷ்குமார், சிவந்தி, கிரிஷாந்தி, துஷ்யந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (6-6-92) பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
31, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.
எஸ். ரீ. தவரத்தினம்
(மருமகன்)
(21291)

## நாகலிங்கம் செல்லம்மா

1 ஆம் வட்டாரம் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கு சோமராத் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் செல்லம்மா 05-06-92 இல் காலமானார்.

அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், பாலசிங்கத்தின் [கனடா] அன்புத் தாயாரும், கமலசரஸ்வதியின் அன்பு மாமியாரும், கலாரஜி, மோகனா, ராஜன், லோஷி, கோகிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், த. சின்னத்துரையின் [புகையிரதப் பகுதி] அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [6-6-92] 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உடுவில் கிழக்கு,
சோமராத் தோட்டம்.
த. சின்னத்துரை.
[சகோதரன்]
[20586]

## உங்களுக்குத் தெரியுமா?



பெயர் : பாலசுப்ரமணியம் விக்னேஸ்வரன்
முகவரி :
நீராவியடி நகர், யாழ்ப்பாணம்
வயது : 19

மேற்படி நபர் போலி இயக்க அத்தாட்சிகளை காண்பித்து பொதுமக்களிடமும், வர்த்தகர்களிடமும் "ஏமாற்று நடவடிக்கை"களில் ஈடுபட்டுள்ளார்.

தற்போது எமது தடுப்பில் உள்ள இவர் பற்றிய விவரங்கள் தெரிந்தவர்கள், கோண்டாவில் செயலகத்துடன் அல்லது அண்மையிலுள்ள பிரதேச செயலகத்துடன் நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளும்படி தயவுடன் வேண்டுகின்றோம்.

— தமிழீழ விடுதலைப் புலிகள்

## கண்சிகிச்சை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று சுட்டிக்காட்டப்படுகிறது. துண்டு கிடைக்காமல் ஏமாற்றமடைந்து நோயாளர் திரும்பிச் செல்லும் அவல நிலையையும் போக்க முடியும் என்று கருதப்படுகிறது

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் புதிய திட்டப்படி வெளி நோயாளர் பிரிவு மேல்மாடியில் மேலதிக கண் பரிசோதனைக் கிளை ஒன்று திறக்கப்படும்.

கண் பரிசோதனைக்கு வரும் நோயாளர்களுக்கு முதலில் இக்கிளையில் வைத்து சோதனை செய்து சிகிச்சை வழங்கப்படும் என்றும்—

தேவைப்படும் நோயாளர்கள் மட்டும் கண் சிகிச்சைப் பிரிவுக்கு, மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுவர் என்றும் —

மேலதிக நோயாளர்களுக்கு அவசர சிகிச்சைகளைப் பொறுத்து திகதி வழங்கப்பட்டு அந்தந்தத் திகதிகளில் தற்போதைய கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## ராஜீவ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனு அண்மையில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுவை ஏற்று ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஆதிரை சார்பிலும், பதிவு செய்யக் கூடாது என்று சி. பி. ஐ. தரப்பிலும் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

தீர்ப்பு வழங்குவதை நீதிபதி வடிவேல் ரத்தினம் ஒத்தி வைத்தார். [உ]

## வலி. வடக்கு...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கி வந்த இலங்கை மின்சார சபைக் களஞ்சியம் ஆகியன சுன்னாகத்திலும் —

தெல்லிப்பழை ப. நோ. கூ சங்கமும் அதன் கிளைகளும் மானிப்பாய் பட்டின சபை கட்டடத்திலும் மற்றும் சங்கானைப் பகுதியிலும் —

தெல்லிப்பழை தெங்கு — டனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியிலும் தற்காலிகமாக இயங்கி வருகின்றன.

## குண்டுவீச்சு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாஸ்திரிகள், அரச துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், கலைஞர்கள், தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டது வித்தியாசமாக இருந்தது.

கொக்குவில், குருநகர்ப் பகுதிகளில் இருந்து புறப்பட்ட ஊர்வலங்களும் நல்லூரில் வந்து இணைந்துகொண்டன. அதைத் தொடர்ந்து மௌனப் பேரணி காலை சுமார் 10-45 மணியளவில் நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமானது மழை சிறிதாகத் தூறிக் கொண்டிருந்தாலும் மக்கள் மிக்க ஆர்வத்துடன் பேரணியில் கலந்து கொண்டனர்.

கோவில் வீதி வழியாகச் சென்ற பேரணி முதலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தை அடைந்தது. அங்கு செஞ்சிலுவை அதிகாரியான செல்வி வெறனிக்காவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து சென்ற பேரணி யாழ். செயலகத்தை அடைந்து. அந்த அரச அதிபர் திரு. கா மாணிக்கவாசகரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது

செயலகத்தில் வைத்து மகஜர் தமிழிலும், ஆங்கிலத்திலும் மக்கள் முன்னால் வாசிக்கப்பட்டது.

சர்வமத குருமார்கள், அறிஞர்கள், பிரமுகர்கள், உயர் அதிகாரிகள், கலைஞர்கள், ஊழியர்கள் ஆகியோர் ஒரே நேரத்தில் செயலகத்தில் கூடி நின்ற காட்சி மனதைத் தொடுவதாக இருந்தது.

அந்தக் காட்சி 1961 ஆம் ஆண்டில் கச்சேரி முன் எல்லாத் துறைகளையும் சேர்ந்தவர்கள் ஒன்றாகக் கூடியிருந்து சத்தியாக்கிரகம் செய்ததை நினைவூட்டியதாக முதியவர் ஒருவர் ஞாபகப்படுத்தினார்.

சுமார் ஒன்றரை மைல் நீளமான பேரணி மிகவும் அமைதியாகவும் மௌனமாகவும் நடைபெற்றது. எனினும் பேரணியில் குண்டு வீச்சைக் கண்டித்துச் சுலோக அட்டைகள் ஏந்திச் செல்லப்பட்டன.

நேற்றைய பேரணி குடாநாட்டு மக்களின் ஒற்றுமையையும், அரசின் அட்டூழியங்களுக்கு எதிரான மன உணர்வின் ஒற்றுமையையும், எழுச்சியையும் பிரதிபலிப்பதாக அமைந்தது.

பேரணியை காவல் துறையினரும் மற்றும் சாரணர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் ஒழுங்குபடுத்தினர். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரண அமைப்புக்களின் முதலுதவிப் பிரிவுகளும் அங்கு கடமையில ஈடுபட்டிருந்தன.

[ஒ-3-111-162-30-143-15]

## தெற்கில் பேய்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 3 மணியுடன் முடிவடைந்த 12 மணி நேரத்தில் பெய்த கடும் மழையின் அளவே இது என வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் 20 லட்சம் பாவனையாளர்கள் மின்விநியோக சேவையை இழந்திருப்பதாகவும் —

மின்விநியோகம் சீராகக் குறைந்தது 48 மணி நேரம் எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் போக்குவரத்தும் சீர்கெட்டுள்ளது. பல இடங்களில் ரயில் பாதைகள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயின.

இரத்தினபுரி, கேகாலை மற்றும் வறக்காப்பொலை ஆகிய பகுதிகளும் வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக அரசாங்கம் சமூக சேவைகள் திணைக்களத்துக்கு இரண்டு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஐந்து மாத பருவமழை காலத்தில் பெய்யும் மொத்த மழை வீழ்ச்சியின் அரைவாசி அளவு மழை ஒரு நாளில் — நேற்று முன்தினம் — பெய்துள்ளதாக பி. பி. ஸி. யின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார். [உ-எ-5]

## மத வழிபாடு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறது என்று ஆலய நிர்வாகிகளின் அறிக்கையில் இருந்து தெளிவாகியுள்ளது.

சர்வதேச நிறுவனங்களின் விதிப்படி, யுத்தப் பிரதேசங்களில் உள்ள வழிபாட்டிடங்களில் பறக்கவிடப்பட வேண்டிய வெள்ளை, நீலக்கொடிகள் துர்க்கை அம்மன் ஆலயத்தில் பறக்கவிடப்பட்டிருந்தும் அதன் மீது குண்டுகள் வீசப்பட்டன.

வற்றாப்பளை அம்மன் கோயில் மீதான தாக்குதல் நடத்தப்பட்டு 15 நாட்களில் துர்க்கையம்மன் ஆலயத்தின் மீது தாக்குதல் நடந்திருக்கிறது இது மக்களின் இதயங்களுக்கு மிகநெருக்கமான சமய கேந்திரங்களை முற்றாகத் துடைத்து அழிப்பதன் மூலம் வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி என்பது தெளிவாகிறது

பொருளாதாரத் தடை போன்றவற்றுடன் இதை இணைத்துப் பார்க்கும் போது —

மக்களை பின்னடைய வைப்பதன் மூலம் போரினை வென்று தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற தடிப்பான தீர்மானத்தை அவர்கள் கொண்டிருப்பதாகவே உணர முடிகிறது.

சமய வழிபாட்டிடம் ஒன்றுக்கு சேதம் விளைவிப்பது நாட்டின் ஒற்றுமைக்கு அழிவைத் தேடும்காரணியாகி விடும் என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

— இவ்வாறு மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3-111-162]

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை

சோமசுந்தர குருக்கள், இராசம்மாவின் மூத்த புதல்வி திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை 28-5-92 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 30 05-92 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
பொ. மோகன்
[மகன்]
[21282]

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம்பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org